1995 நவம்பர் 10] [திரு. சஞ்சய் ராமசாமி]

பெற்றவுடன் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தனியாக அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் *12-25*

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. முனிவெங்கடப்பன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *1995-96*ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் *275* முதல் *281* வரையிலான *7* அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன். இவ்வறிக்கைகள் அச்சடிக்கப்பட்டு, பேரவையில் அளிக்கப்பெறுவதற்கு போதிய காலஅவகாசம் இல்லாததால், இவ்வறிக்கைகளின் படியெடுத்த நகல்கள் பேரவையில் வைக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகளின் நகல்கள் சட்டமன்ற நூலகத்தில் உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகளின் அச்சடிக்கப்பட்ட நகல்கள் கிடைக்கப்பெற்றவுடன், உறுப்பினர்களுக்கு தனியாக அனுப்பி வைக்கப் பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

(இ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. எஸ். ஜெயக்குமார், மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *1995-96*ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் *43* மற்றும் *44*-வது அறிக்கைகளை அச்சிட்டு பேரவைக்கு அளிக்க போதிய கால அவகாசம் இன்மையால், இவ்விரு அறிக்கைகளின் தட்டச்சுப் பிரதிகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன். பேரவை உறுப்பினர்களின் பார்வைக்காக இரு பிரதிகள் பேரவை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அறிக்கைகள் அச்சடிக்கப்பட்டதும், அவைகள் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்படும்.